# டாக்ஸி ஓட்டுநர்களுக்கான
# தொழில்முறை உரிமம் புள்ளிமுறை (VLPS)

**<u>பொருளடக்கம்</u>**


**முன்னுரை** 2

**VLPS குறித்து டாக்ஸி ஓட்டுநர்கள் அறிந்து கொள்ள வேண்டியவை யாவை?**

- புகார்களை எவ்வாறு கையாள்கிறார்கள்? 3

- VPLS கீழ் பட்டியலிடப்பட்டுள்ள சட்ட விரோதச் செயல்கள் 4- 7

- எப்பொழுது தொழில்முறை உரிமத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம் அல்லது ரத்து செய்யலாம்? 7

- பழைய தகுதியிழப்பு புள்ளிகளை குறிப்பேடுகளிலிருந்து நீக்க முடியுமா? 8

**பயணிகள் அறிந்திருக்க வேண்டியவை யாவை?**

- ஒரு டாக்ஸி ஓட்டுநர் மீது எவ்வாறு புகார் கொடுப்பது? 9

- புகார் கொடுக்கும்போது தெரிவிக்க வேண்டிய விவரங்கள் 9

## முன்னுரை

### தொழில்முறை உரிமம் புள்ளிமுறை (VLPS) என்றால் என்ன, அது எவ்வாறு செயல்படுகிறது?

தொழில்முறை உரிமம் புள்ளிமுறை என்பது நன்னடத்தை குறித்த விதிகளை மீறும் டாக்ஸி ஓட்டுநர்கள் மீதான புகார்களை விசாரித்து, ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு மறுசீரமைக்கப்பட்ட ஒரு முறையாகும்.

VLPS கீழ் விசாரணை நடத்துவது மற்றும் ஒழுங்கு நடவடிக்கையை விதிப்பது, பயணி மற்றும் ஓட்டுநர் இருவரிடையே வெளிப்படையாக நடைபெறுகிறது. இந்த VLPS முறையின் கீழ் வாடகை வண்டி நிறுவனங்கள் தங்கள் ஓட்டுநர்களை ஒழுங்குபடுத்தவும், அவர்களுக்குக் கல்வியளிக்கவும் அவர்கள் நல்ல வாடிக்கையாளர் சேவை வழங்க ஊக்கமளிக்கவும் வகைசெய்துள்ளது.

VLPS கீழ், பட்டியலில் உள்ள சட்டமீறல்களுக்கு தண்டனையாக அபராதத்துடன் தகுதியிழப்புப் புள்ளிகளும் உண்டு.

ஒரு டாக்ஸி ஓட்டுநர் 24 மாதத்திற்குள் 6 முதல் 20 வரை தகுதியிழப்புப் புள்ளிகளைப் பெற்றால், அந்த டாக்ஸி ஓட்டுநரின் தொழில்முறை உரிமம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படலாம்.

ஓட்டுநர்கள் தங்களை மேம்படுத்திக் கொள்வதை ஊக்குவிக்கும் வகையில், அவர்கள் கடைசியாக சட்ட மீறல் செய்த நாளிலிருந்து, தொடர்ந்து 24 மாதங்களுக்கு ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வந்தால் அவர்களின் முந்தைய தகுதியிழப்புப் புள்ளிகள் நீக்கப்படும்.

இந்த VLPS முறை ஜுன் 2003-ல் அமுலுக்கு வந்தது.

**VLPS குறித்து டாக்ஸி ஓட்டுநர்கள் அறிந்து கொள்ள வேண்டியவை யாவை?**

**புகார்களை எவ்வாறு கையாள்கிறார்கள்?**

நிலப்போக்குவரவு வாரியம் (LTA) புகார்கள் கிடைக்கப் பெறுகிறது.

புகார்கள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. ஒன்று விசாரணைக்காக, மற்றொன்று ஒழுங்கு நடவடிக்கைக்காக.

கீழ்க்காணும் அடிப்படையில் வாரியம் விசாரணையை மேற்கொள்கிறது:

1) சட்ட ஒழுங்கை மீறி நடந்தால்
2) யெல்லோ டாப் டாக்ஸி ஓட்டுநர் மீது புகார்கள் வந்தால்
3) காவல்துறையினர், மற்றும் நிலப் போக்குவரவு வாரிய அமலாக்க அதிகாரிகளிடம் இருந்து வரும் அறிக்கை மீது

VLPS கீழ் வரும் சட்டவிரோத செயல்களுக்கு LTA , டாக்ஸி ஒட்டுநர்களுக்கு தகுதியிழப்புப் புள்ளிகளை வழங்குகிறது. (குற்றப் பட்டியலைப் பார்க்கவும்)

வாரியம் LTA ஓர் ஓட்டுநரின் தொழில்முறை உரிமத்தை, 24 மாதங்களில் அவர்கள் பெற்றுள்ள தகுதியிழப்புப் புள்ளியின் அடிப்படையில் தற்காலிகமாக நிறுத்திவைக்கலாம் அல்லது ரத்து செய்யலாம்.

டாக்ஸி நிறுவனங்கள் வாடிக்கையாளர் சேவை குறித்த புகார்கள் மீது கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ளும்.

டாக்ஸி நிறுவனங்கள் தங்கள் நிறுவன ஓட்டுநர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கின்றன. அந்த நடவடிக்கைகளைத் தணிக்கைக்காகக் குறிப்பேட்டில் பதிந்து வைக்கின்றன.

**VPLS -ன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள சட்டவிரோத நடவடிக்கைகள்**

**3 தகுதியிழப்பு புள்ளிகள்**
**அபராதம் $ 100**

- தொழில்முறை உரிமத்தை தற்காலிகமாக நிறுத்திவைத்த பின் அல்லது ரத்து செய்த பின் கொடுக்க மறுக்கும்போது
- மற்ற டாக்ஸி ஒட்டுநர்கள் பயணிகளை ஏற்றுவதைத் தடுத்தாலோ அல்லது வழி மறித்தாலோ
- ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணம் இல்லாமல், பயணிகள் செல்லும் இடத்திற்கு அவர்கள் கூறும் நேர் மற்றும் குறுக்குவழியில் செல்ல மறுத்தால்
- பயணிகள் ஏறி பயணம் தொடங்குமுன்பே டாக்ஸி மீட்டரைப் போடுவது
- இறங்கும் போது சரியாக டாக்ஸி மீட்டரை நிறுத்தாமல் இருப்பது
- பயணத்தின் போது டாக்ஸி மீட்டரை மாற்றியமைப்பது
- மீட்டர் காட்டும் கட்டணத்திற்கு மேல் கட்டணம் வாங்க முற்படுவது
- பயணிகளை வார்த்தைகளால் அவமரியாதைப்படுத்துவது, பயமுறுத்தி சம்மதிக்க வைப்பது அல்லது அலைக்கழிப்பது (பாலியல் சம்பந்தமில்லாத பிற வழிகளில்)
- அங்கீகரிக்கப்படாத இடங்களிலிருந்து பயணிகளை ஏற்றிச் செல்வது அல்லது இறக்கிவிடுவது
- பொதுப் பயணிகள் ஏற்றும் இடத்தில் பின்னால் இருந்து முன்னால் செல்ல மறுப்பது, ஆக முன்னால் இருக்கும் காலியிடத்திற்குச் செல்ல மறுப்பது
- மற்ற டாக்ஸி ஓட்டுநர்களை வேண்டுமென்றே வழி மறைப்பது, இடையூறு உண்டாக்குதல் அல்லது நிறுத்துமிடங்களில் நிறுத்தவிடாமல் தடுப்பது, அல்லது பொதுப் பயணிகள் ஏற்றுமிடத்தில் காத்திருக்கவிடாமல் செய்வது
- டாக்ஸியை வாடகைக்குப் பயன்படுத்த முடியாத சமயத்திலும் பொதுப்பயணிகள் ஏற்றுமிடத்தில் நிறுத்துவது, அல்லது காத்திருப்பது
- பதிவாளர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை டாக்ஸியைப் பரிசோதிக்கும் அதிகாரத்தை மற்றும் கடமையைச் செய்ய விடாமல் தடுப்பது

**5 தகுதியிழப்பு புள்ளிகள்**
**அபராதம் $ 200**

- காலாவதியான தொழில்முறை உரிமத்தை வைத்துக்கொண்டு டாக்ஸி ஒட்டினால்
- மற்றவர்களின் தொழில்முறை உரிமத்தைப் பயன்படுத்தினால் அல்லது தன்வசம் வைத்திருந்தால்
- பயணிகளுக்கு அஜாக்கிரதையான நடவடிக்கை மூலமாகவோ அல்லது வேண்டுமென்றே தவறான நடத்தை மூலமோ காயம் உண்டாக்கினால்
- டாக்ஸி மீட்டரை மூடிவைத்தால் அல்லது தெளிவாகத் தெரியாமல் செய்தால்
- பயணி அவர் செல்லவேண்டிய இடத்தை அடைவதற்கு முன்பே சரியான காரணம் இல்லாமல் வாடகைக்கு வர மறுத்தால், அல்லது பாதிப் பயணத்திலேயே பயணியை இறங்கச் சொன்னால்
- வார்த்தைகளால் நிந்தித்தால், பயமுறுத்திச் சம்மதிக்க வைத்தால், அல்லது பாலியல் ரீதியாக தொந்தரவு செய்தால்
- பயணிகள் டாக்ஸியில் தவறவிட்டுச் சென்ற பொருட்களை (24 மணி நேரத்திற்கு மேலும் 7 நாட்களுக்குள்ளும்) திரும்பத் தராமல் தன்வசமே வைத்திருந்தால்

19 நவம்பர் 2007 முதல், டாக்ஸி ஓட்டுநர்களுக்கான  தொழில்முறை உரிமம் புள்ளிமுறை (VPLS) அபராதங்கள் கீழ்க்கண்ட குற்றங்களுக்கு மாற்றி  அமைக்கப்பட்டுள்ளதை பட்டியலில் காணலாம்

| | VPLS முறையின்கீழ் குற்றச் செயல்கள் | மாற்றியமைக்கப்பட்டுள்ள VPLS அபராதம் |
|---|---|---|
| 1. | ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணம்  இல்லாமல் டாக்ஸியை எடுக்க மறுப்பது அல்லது பயணிகளை ஏற்றிச் செல்ல மறுப்பது | 6 தகுதி இழப்பு  புள்ளிகள் அபராதம் : $300 |
| 2. | பயணிகளை வற்புறுத்தி பயணம் செய்ய நெருக்குவது | 12 தகுதி இழப்பு  புள்ளிகள் அபராதம் : $500 |
| 3. | அதிக கட்டணம் வசூலித்தல் ( $20-க்கு குறைவாக) | 12 தகுதி இழப்பு  புள்ளிகள் அபராதம் : $500 |

| **<u>21 தகுதியிழப்பு புள்ளிகள்</u>**<br>**<u>அபராதம் $ 500</u>**<br>**<u>தொழில்முறை உரிமம் ரத்து செய்யப்படும்</u>** |
|---|
| • தொழில்முறை உரிமம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் போது டாக்ஸியை ஒட்டினால்<br><br>• தன் தொழில்முறை உரிம அட்டையை மற்றவரிடம் கொடுத்து வைத்திருந்தால், அல்லது உபயோகப்படுத்திக் கொள்ள அனுமதியளித்திருந்தால்<br><br>• அதிகக் கட்டணம் வசூலித்தால் ($20 வெள்ளி அல்லது அதற்கும் கூடுதலாக)<br><br>• பயணிகள் மறந்து விட்டுப் போன பொருட்களை 7 அல்லது அதற்கும் மேற்பட்ட நாட்களுக்குத் தன்வசம் வைத்திருந்தால்<br><br>• டாக்ஸி மீட்டரை அல்லது மற்ற பாகங்களைத் தவறான நோக்கத்துடன் மாற்றினால், ஈடுகட்டினால், திருத்தினால் |

| **<u>21 தகுதியிழப்பு புள்ளிகள்</u>**<br>**<u>நீதிமன்ற நடவடிக்கை</u>**<br>**<u>தொழில்முறை உரிமம் ரத்து</u>** |
|---|
| • தொழில்முறை உரிமம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள டாக்ஸி ஒட்டுநர் ஒருவரிடம் தன் டாக்ஸியைக் கொடுத்து ஒட்டச் சொன்னால் அல்லது தொழில்முறை உரிமமே இதுவரை பெறாத ஒருவரிடம் கொடுத்து ஓட்ட அனுமதித்தால் |

**எப்பொழுது தொழில்முறை உரிமம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும் அல்லது ரத்து செய்யப்படும்?**

ஒரு டாக்ஸி ஓட்டுநரின் தொழில்முறை உரிமம் அவருக்கு 6 அல்லது அதற்கு மேற்பட்ட தகுதியிழப்பு புள்ளிகள் சேரும் பட்சத்தில் அவரது தொழில்முறை உரிமம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும். தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும் காலம் 2 முதல் 8 வாரம் வரை கீழ்க் காணும் பட்டியலில் உள்ளவாறு இருக்கலாம்.

| **தகுதியிழப்புப் புள்ளிகள்** | **நிறுத்திவைக்கப்படும் காலவரையறை** |
|---|---|
| 6 முதல் 10 | 2 வாரங்கள் |
| 11 முதல் 15 | 4 வாரங்கள் |
| 16 முதல் 20 | 8 வாரங்கள் |

VPLS -ன் கீழ் டாக்ஸி ஓட்டுநர்களின் உரிமம் ரத்து செய்யப்படுவதற்கு முன்பாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும் காலம் அதிகரித்துக் கொண்டே போகும். இந்த நடவடிக்கையை ஓட்டுநர்கள், உரிமம் ரத்து செய்யப்படுவதற்கு முன்னர் அவர்களின் நடவடிக்கையை சரிசெய்து கொள்ள அளிக்கப்படும் ஒரு எச்சரிக்கை நடவடிக்கையாகக் கொள்ள வேண்டும். ஆனால் டாக்ஸி ஓட்டுநர்கள் மிகக் கடுமையான தவறு செய்தால் அவர்களின் உரிமம் உடனடியாக ரத்து செய்யப்படும்.

**ஒரு டாக்ஸி ஓட்டுநர் 24 மாதத்திற்குள் 21 அல்லது அதற்கு மேற்பட்ட தகுதியிழப்புப் புள்ளிகளைப் பெற்றால், அவருடைய தொழில்முறை உரிமம் ரத்து செய்யப்படும்.**

**பழைய தகுதியிழப்பு புள்ளிகளை குறிப்பேடுகளிலிருந்து நீக்க முடியுமா?**

ஒரு டாக்ஸி ஓட்டுநர் அவர் கடைசியாகத் தவறு செய்த நாளிலிருந்து 24 மாதங்களுக்குள் தவறு எதுவும் செய்யாமல் இருந்தால் அவருடைய தகுதியிழப்புப் புள்ளிகள் குறிப்பேட்டிலிருந்து நீக்கப்படும்

**பயணிகள் அறிந்திருக்க வேண்டியவை யாவை?**

**ஒரு டாக்ஸி ஓட்டுநர் மீது எவ்வாறு புகார் கொடுப்பது?**

கீழ்க் காணும் வழிகளில் ஒரு டாக்ஸி ஓட்டுநர் மீது ஒரு பயணி புகார் அளிக்கலாம்:

1) தொலைபேசி மூலம்:
   நிலப் போக்குவரவு வாரியத்தின் 1800 (Call LTA) நேரடித் தொலைபேசி எண்ணை- அல்லது 1800- 2255582. அழையுங்கள்

2) மின்னஞ்சல்:
   நிலப் போக்குவரவு வாரியத்தின் http://www.lta.gov.sg இணையத் தளத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்

3) கடிதம் அல்லது தொலைப்பிரதி மூலம்
   பஸ் & டாக்ஸி ரெகுலேஷன் பிரிவு
   நிலப் போக்குவரவு வாரியம்
   10 சின் மிங் டிரைவ்
   சிங்கப்பூர் 575701

தொலைப் பிரதி எண்: 6553 5329

**புகார் கொடுக்கும்போது நீங்கள் அளிக்க வேண்டிய விவரங்கள்.**

ஒரு பயணி புகார் கொடுக்கும் சமயத்தில் பின்வரும் விவரங்களைத் தர வேண்டும்:

1) டாக்ஸியின் பதிவு எண் (எண்ணுக்கு முன்னும் பின்னும் உள்ள ஆங்கில எழுத்துக்களுடன்) உதாரணம் SHA 1234Z.
2) சம்பவம் இடம் பெற்ற தேதி மற்றும் நேரம்
3) சம்பவம் நேர்ந்த இடம் மற்றும் / அல்லது சம்பவம் எந்த இடத்தில் ஆரம்பித்து எந்த இடத்தில் முடிந்தது என்ற விவரம்
4) சம்பவம் பற்றிய ஒரு சிறு குறிப்பு

விசாரணை நடத்த உதவக்கூடிய கூடுதல் விவரங்கள் பின்வருமாறு:
1) டாக்ஸியின் நிறம் மற்றும் மாதிரி
2) நீங்கள் செலுத்திய கட்டணம்
3) காணப்பட்ட குறி அல்லது அடையாளம்
4) டாக்ஸி ஓட்டுநர் குறித்த ஒரு சிறு குறிப்பு

பயணிகள் நீதிமன்றத்துக்கு வந்து அவர்களுடைய புகாருக்கு ஆதரவாகப் பேச வேண்டியிருக்கும்

மற்ற அதிகாரபூர்வ மொழிகளில் VLPS கையேடு பெறவிரும்புவோர் அன்புகூர்ந்து  நிலப் போக்குவரவு வாரிய (LTA) http://www.lta.gov.sg இணையத் தளம் சென்று பாருங்கள்.

இந்தக் கையேட்டில்  தரப்பட்டுள்ள தகவல்கள் தற்போது அச்சிடப்பட்டு வருகின்றன. அதிகாரிகள் மாற்றம் தேவை எனக் கருதினால் இத் தகவல் மாற்றப்படலாம்.